# பல்லவ மன்னர் – ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

# Pallava King - Aiyadigal Kadavarkon Nayanar

***அ. கிரேஸி ஜெனோவா***
உதவிப்பேராசிரியர்
தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி), கடலூர், இந்தியா

**A. Crazy Genoa**
*Assistant Professor*
*St. Joseph's College of Arts and Science*
*(Autonomous), Cuddalore, India*

## ஆய்வுச் சுருக்கம்

*வையகத்தில் வாழ்கிறவன், விலங்குகளைப் போல வாழாமல் வாழ வேண்டிய வழிமுறைகளில் வாழ்ந்தால் தெய்வமாக மதிக்கப்படுவான் என்பது வள்ளுவன் வாக்கு. இதன்படி வாழ வேண்டிய வழிமுறைகளை வகைதொகைப்படுத்திக் கொடுப்பதே சமயம். சமயம் – மனிதனின் ஆன்மா இறைவனை அடையத் தகுதியாகும் ஒழுக்கம் அல்லது நெறி. இது மானிட சமுதாயத்தை நல்வழியில் வாழ வழிகாட்டும் தன்மை உடையது. இத்தகைய சமயத்தின் நோக்கம் கடவுளைச் சென்று சேருதல் என்பர். உலக வாழ்விலோ பொய்மையும் அதற்குக் காரணமான அறியாமையும் அதன் விளைவாகிய துன்பமும் நிறைந்து காணப்படுகிறது. அவற்றை விடுத்து உண்மை, அறிவு, இன்பம் ஆகியவற்றைச் சேர்வதே சமயவாழ்வின் குறிக்கோள் எனலாம். சைவ சமய உலகில் அறுபத்து மூன்று நாயன்மார்கள் சைவ சமயம் தழைக்கப் பாடுபட்டனர். அரசன் முதல் ஆண்டி வரை பல்வேறுபட்ட குலத்தினர் சிவனடியார் என்னும் பொதுமைச்சிறப்பால் ஒரு நிறையில் நிறுத்தப்பட்டுள்ளனர் என்பதை பெரியபுராணத்தில் சேக்கிழார் திரட்டிப் பாடியுள்ளார். இவர்கள் பல்வேறுபட்ட சிவத்தொண்டுகள் செய்து உயர்ந்தனர்.*

*சேர, சோழ, பாண்டியர், பல்லவர், களப்பிரர், சிற்றரசர் மன்னர் மரபில் நாயன்மார்கள் பன்னிருவர் ஆவர். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் பலர் நாடாளும் மன்னர்களாக இருந்து பின்னர் சிறந்த சிவபக்தர்களாகவும் திகழ்ந்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் பல்லவர் – "ஐயடிகள் காடவர்கோன்" ஆவார். பதினொராம் திருமுறையில் ஐந்தாவது இலக்கியமாகத்*

## Abstract

*Thiruvalluvar says that a person who lives in world will be respected as a deity if he does not live like animals but lives according to the ways in which he should live. Religion is a classification of ways to live according to this. Religion - the discipline or morality in which the soul of man is fit to reach God. It guides human society to live in a better way. The aim of such a religion is to reach God. The life of the world is full of falsehood and its cause of ignorance and the consequent misery. The goal of religious life is to replace them with truth, knowledge and happiness. In the world of Saivism, 63 Nayanmars worked for the flourishing of Saivism. In the Periya Puranam Sekkizhar sums up the fact that the various tribes from the king to the Andi are placed in one position by the commonality of Sivanadiyar. They performed various Shiva services and rose to prominence.*

*There were twelve Nayanmars in the Chera, Chola, Pandya, Pallavas, Kalabhras and feudatory kings. Among the sixty-three*

*தொகுக்கப் பெற்றுள்ள சேஷத்திரத் (சிவத்தளியை) திருவெண்பாவை அருளிச்செய்தவர், இவரது வரலாற்றினை குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.*

*Nayanmars, many were kings and later transformed to great devotees of Lord Shiva. One of them was Aiyadigal Kadavarkon. The purpose of this article is to study the history of Aiyadigal Kadavarkon who wrote Sekshatra (Sivathali) Tiruvenpa, the fifth literature of the eleventh Thirumurai.*

***Keywords:***

*Kadavarkon, Thiruvenpavai, Nayanmars, Sivanadiar, Pallavar, Periya Puranam, Tiruttondar Puranam*

**Citation**

Crazy Genoa, A. “Pallava King - Aiyadigal Kadavarkon Nayanar.” *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 4, 2024, pp. 36–43.

**DOI**: *https://doi.org/10.5281/zenodo.20095181*

**நாயன்மார்கள்**

*நாயன்மார்கள் என்போர் சைவ அடியார்கள். இவர்கள் கி.பி.400-1000 கால கட்டத்தில் தமிழ்நாட்டில் வாழ்ந்திருந்த சிறந்த சிவனடியாாகள் சிலர். சுந்தரமூர்த்தி நாயன்மார் திருத்தொண்டத்தொகையில் அறுபத்து இரண்டு நாயன்மார்களைப் பற்றிக் கூறியுள்ளார். அதன் பின் சேக்கிழார் கூறப்பட்ட அறுபத்து இரண்டு பேருடன் சுந்தரமூர்த்தி நாயன்மாரையும் இணைத்து திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணாத்தில் குறிப்பிட்டுள்ளார். சுந்தரமூர்த்தி நாயனார் சிவபெருமான் அடியெடுத்துக் கொடுக்கப் பாடிய நாயன்மார் அறுபது பேர் தான். சுந்தரமூர்த்தி நாயனார் மறைவுக்குப் பின் 100 ஆண்டுகள் கழித்து நம்பியாணடர் நம்பி அடிகள் 60 நாயன்மாரைப் பாடிக்கொடுத்த சுந்தரர், அவரைப்பெற்றுக் கொடுத்த தந்தை (சடையனார்), தாய் (இசைஞானியார்) ஆகியோரைச் சேர்த்து 63 நாயன்மார்கள் ஆக்கினார். நாயன்மார்களில் சிலரே சமய நூல்களில் புலமை உடையவர்கள். மற்றவர்கள் மிகச் சிறந்த பக்தர்கள் மட்டுமே. பலரும் பல்வேறு தொழில்கள் செய்து உயிர் வாழ்ந்தவர்கள். இறையருள் பெற பக்தி மட்டுமே போதுமானது என்பதும் எல்லோரும் இறைவன் திருவடிகளை அடையலாம் என்பதுமே இவர்கள் வாழ்க்கை தரும் பாடமாக உள்ளது. ஈசன் இன்றி அணுவும் அசையாது. காலனை உதைத்த கருணாமூர்த்தியே தன்னலமற்ற பக்தியுடன் நாம் சிவாலயம் சென்று சிவபெருமானை வழிபடுவோம் என்பர். நாயன்மார்களுக்குச் சிவாலயங்களில் சுற்றுப்பிரகாரத்திற்குள் கற்சிலைகள் வைக்கப்படுகின்றன. அத்துடன் அறுபத்துமூவரின் உலோகச் சிலைகளும் ஊர்வலத்தின் பொழுது எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்த ஊர்வலத்திற்கு அறுபத்து மூவர் திருவீதி உலா என்று பெயர்.*

**பல்லவர் வரலாறு**

*கோச்செங்கணான், புகழ்ச்சோழர் இவர்கட்குப் பிறகு அப்பர் சைவ சமயத்திற்குத் திரும்பி வரும்வரை சைவசமயம் ஓரளவு வளர்ச்சி பெற்றதாயினும், சமணத்தாற் பெரிதும் தாக்குண்டு வந்தது என்பது தண்டியார், நமிநந்தி இவர்தம் வரலாறுகளாலும், அப்பரே சைவத்திலிருந்து சமணத்திற்கு மாறிப் பல ஆண்டுகள் இருந்தார் என்பதையும், நெடுமாறன் சமணனாக இருந்தான் என்பதையும் நன்கு அறியலாம். எனினும் இந்நிலை பல்லவ நாட்டில் அப்பர் முயற்சியாலும், பாண்டிய நாட்டில் சம்பந்தர் முயற்சியாலும் மாறித் தமிழகம் சைவ நெறியில் தழைத்த காலமும் பல்லவர் காலமே. அக்காலத்துப் பல்லவ அரசாலும் பொது மக்களாலும் சிற்றரசாலும் சைவசமயம் எங்ஙனம் வளர்க்கப்பட்டது என்பதைக் காண்பது இன்றியமையாததாகும். இப்பல்லவரை பெரிய புராணம் 'தொல்லைப்பல்லவர்' என்றும் கூறுவதை, பல்லவர் வரலாறு நூல் சுட்டுகிறது. ஏறக்குறைய கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கந்த சிஷ்யன் என்ற பல்லவன் திருக்கழுக்குன்றம் சிவன் கோவிற்கு நிலதானம் செய்தான். ஐயடிகள் காடவர்கோன் என்று கருதப்படும் மூன்றாம் சிம்மவர்மன் சிவத்தல யாத்திரை செய்து தலம் ஒன்றுக்கு ஒரு வெண்பா வீதம் பாடினார்.*

**காடவர் விளக்கம்**

*காடவர் என்பது பல்லவ மன்னர் குலத்தினரைக் குறிக்கும் பொதுப்பெயர். ''பாராண்ட பெரும்படை பல்லவர் தம் பள்ளிவாழ்படை''. பல்லவரென்னும் பெயர் பள்ளிகளென மருவி வழங்கலாயிற்று என்பது புலவர் சிவங்கருணாலய பாண்டியனார் கருத்து. இன்றும் பல்லவர் குலமாக அறியப்படுவது வன்னியர் குலமாகிய காடவராயர் மற்றும் சம்புவராயர்கள் மட்டுமே. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரும், தமிழ் புலமையுடையவரும்,*

*தொண்டை நாட்டரசருமாய்த் திகழ்ந்து, கி.பி.ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஐயடிகள் என்னும் பல்லவர்கோன் ஐயடிகள் காடவர்கோன் எனப்படுகிறார். ஐயடிகள் என்பது ஐயனடிகள் என்பதன் மருவாகும். ஐயடிகள் காடவர் கோன் என்னும் பெயர் ஐயனடிகளாகிய பல்லவ மன்னர் என்ற பொருள் தரும் பெயர். "ஐயன்அடிகள் என்ற தொடரே ஐயடிகள் என்று மருவியதாக சைவ சமயக் கலை களஞ்சியம்" நூலில் செல்வகணபதி குறிப்பிட்டுள்ளார். (ப.420).*

**ஐயடிகள் யார்?**

*இந்நாயனார் பல்லவ மன்னர்களில் யாவர் என்பதையும் இவரது காலத்தையும் பேராசிரியர் திரு.க.வெள்ளைவாரணனார் குறிப்பிட்டுள்ளார். சுந்தரர் திருத்தொண்டர்த் தொகையில்,*

*"கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்" - எனக் குறிப்பிடப்படும் மன்னன் காஞ்சியில் கைலாசநாதர் கோயிலைக் கட்டிய ராஜசிம்ம பல்லவனாவான் என்றும் அம்மன்னனது தந்தையாகிய முதலாம் பரமேசுவரவர்மனே ஐயடிகள் காடவர்கோன் என்றும் குறிப்பிடுகிறார். இக்கோவிலில் இம்மன்னனது கல்வெட்டுகள் வடமொழியில் உள்ளன. மன்னனுக்கு இறைவன் அசரீரியாக உணர்த்தினான் என்று கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.* (South Indian Inscriptions -Tamil and Sansckrit-Volume-1 - *பக்கம் 14-வரி-7) எண்ணற்ற எதிரிகளைத் துகளாக்கிய இம்மன்னன் சைவசித்தாந்தப் பாதையில் நின்றவன் என்றும் கூறப்பட்டுள்ளது. இவனது வீரத்தையும், சிவபக்தியையும் கூறும் இவ்வடமொழிக் கல்வெட்டுகள் மிக விரிவானவை. இராசமாணிக்கனாரின் பல்லவர் வரலாறு நூலில் முதலாம் பரமேசுவரவர்மன் சிறந்த சிவபக்தன். இவன் தன் பெருநாட்டின் பல பாகங்களில் சிவன் கோவில்களைக் கட்டினான். பலவற்றைப் புதுப்பித்தான். இவன் கூரம் என்ற சிற்றூரில் சிவன் கோவில் ஒன்றைக் கல்லாற் கட்டினான். அதற்கு இவ்வரசன் "பரமேசுர மங்கலம்" எனப்பெயர் சுட்டி அவ்வுரில் விச்சாவிநீத பல்லவ பரமேசுவர கிருகம் என்ற சிவாலயத்தை முதன் முதல் கற்றளியாகக் கட்டிய பெருமைக்கு உரியவன். மாமல்லபுரத்தில் இவன் பாட்டனாகிய நரசிம்மவர்மன் காலத்தில் தொடங்கி, இம்மன்னனால் முற்றுவிக்கப்பட்ட ஆலயத்தில் காணும் கல்வெட்டால் இவன் வடமொழி தென்மொழிகளில் வல்லவன் என்பதை அறியலாம். இக்கோவிலே "தமிழகத்து முதற்கற்கோவில் ஆகும்" என்ற குறிப்பும் காணப்படுகின்றது. (ப.144) இப்பொழுது பெரிய சிவன் கோவில்களில் நடக்கும் எல்லா வழிபாடுகளும் இவன் காலத்திலும் நடந்து வந்தன என்பதைக் கூரம் பட்டயத்தால் அறியலாம். இவ்வாறு பெருவீரனாகவும் சிவநெறியாளனாகவும் புலமையாளனாகவும் விளங்கிய பரமேசுவர வர்மன் தன் ஆட்சியைத் தன் புதல்வன்பால் ஒப்புவித்து விட்டு, தலங்கள் தோறும் சென்று வழிபட்டு வெண்பா மாலைகளால் இறைவனை அர்ச்சித்து வழிபட்டு வந்ததால் அவன் மகனாலும் குடிமக்களாலும் இம்மன்னன் 'ஐயடிகள்' எனப் போற்றப்பெற்றான் என்று கொள்ளலாம். இவர் காலம் கி.பி.670 முதல் 685 வரையாகும். காஞ்சிபுரத்திலிருந்து ஆட்சி செய்த பல்லவர்களில் ஐயடிகள் காடவர்கோன் நாயனாரும் ஒருவர். சிவநெறியைப்போற்றி வளர்த்தார். கலியையும் பகைவரது வலிமையையும் அடக்கி சைவநெறியை எங்கும் பரவச் செய்து நீதி நெறி தழுவாது அரசு புரிந்தார் என்பதனை சேக்கிழார்,*

***"வையநிகழ் பல்லவர்தங் குலமரபின் வழித்தோன்றி***

***..............................................................................................***

***ஐயடிகள் நீதியால் அடிப்படுத்துஞ் செங்கோலார்"***

***- (சேக்கிழார் பெரிய புராணம் 4046 பா.1-4 வரிகள் காண்டம்-1)***

*குறிப்பிடுகிறார். வடமொழி, தமிழ் இரு மொழிகளிலும் வல்லவர் என்பதை பெரியபுராணத்தில்,*

***"மன்னவரும் பணிசெய்ய வடநூல்தென் தமிழ்முதலாம்***
***பன்னுகலைப் பணிசெய்ய"***

***- (சேக்கிழார் பெ.புராணம்-பா.4048. 1-2 வரிகள்)***

*குறிப்பிட்டுள்ளார். மேலும், மற்றுமொரு பாடலில்,*

***"திருமலியும் புகழ்விளங்கச் சேணிலத்தில் எவ்வுயிரும்***
***பெருமையுடன் இனிதமரப் பிறபுலங்கள் அடிபடுத்துத்***
***தருமநெறி தழைத்தோங்கத் தாரணிமேல் சைவமுடன்***
***அருமறையின் துறைவிளங்க அரசளிக்கும் அந்நாளில்"***

***- (சேக்கிழார் பெரிய புராணம்' 4047 பா: 2 காண்டம்-1)***

*என இம்மன்னரது பெருவீரத்தையும் சிவநெறிப்பற்றையும் போற்றியும் உள்ளார்.*

***'கன்னி மதில்சூழ் காஞ்சிக் காடவர் ஐயடிகளார்' (பா.47, வரி.1)***

*எனவும் கூறுகிறார்.*

***"முத்திப்பதம் ஓரோர் வெண்பா மொழிந்து முடியரசா***
***பத்திக் கடல் ஐயடிகளாகின்ற நம் பல்லவனே"***

***(பா.56, வரிகள்.3-4)***

*நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர்த் திருவந்தாதியிலும், நம்பிஆரூரர், "ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்" - (பா:8 வரி-2) என்றும் இம்மன்னனைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.*

**ஐயடிகள் வாழ்வும் பணியும்**

*அரசுரிமை தன் சிவனடித்தொண்டுக்கு இடையுறாகும் என உணர்ந்து அதனைத் தன் புதல்வன் பால் ஒப்புவித்துத் தலயாத்திரை மேற்கொண்டு சிதம்பரம் முதலான அனைத்துச் சிவ தலங்களையும் வழிபட்டு ஓரோர் வெண்பாவால் அத்தலங்களைப் போற்றிப் பாடினார். அவ்வெண்பாக்களில் இருபத்து நான்கு வெண்பாக்களே கிடைத்துள்ளன. எஞ்சியவை அழிந்து விட்டன. அவற்றின் தொகுப்பே 'சேஷத்திர வெண்பா'. இவர் பாடிய வெண்பா பதினொன்றாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. சிவபெருமான் வீற்றிருந்து அருள்புரியும் திருக்கோவில் எல்லாவற்றையும் நேரில் கண்டு வழிபடத்துணிந்தார் ஐயடிகள். ஒவ்வொரு தலத்தையும் வழிபட்டுத் திருத்தொண்டு செய்து ஒவ்வொரு தலத்துக்கும் ஒவ்வொரு வெண்பாப் பாடித்துதித்தார். அந்நூலுள் குறிக்கப்பெற்ற தலங்கள் பின்வருவனவாகும். அவை, தில்லை, குடந்தை, ஐயாறு, ஆரூர், திருத்துருத்தி (குற்றாலம் தஞ்சைக் கோட்டம்), திருக்கோடிகா, பாண்டவாய்த்தென்இடைவாய், திருநெடுங்களம், குழித்தண்டலை, ஆனைக்கா, மயிலாப்புர், உஞ்சேனை மாகாளம், வளைகுளம், சாய்க்காடு, திருப்பாச்சிலாச் சிராமம், சிராமலை, திருமழபாடி, திரு ஆப்பாடி, காஞ்சிபுரம், திருப்பானந்தாள், ஒற்றியுர், திருக்கடவுர், திருக்கடவுர் மயானம் ஆகியவை. இவற்றில் சோழநாட்டுப் பதிகள் இருபதைப் பற்றிப் பாடியுள்ளார். இவர் பாடல்களில் காஞ்சித்திணை செய்திகளே மிகுதியானவை. நிலையாமையை உணர்த்தி இப்பதியில் இறைவன் அடிசேர்க்க எனக்கூறும்போது பதிகளை வரிசைப்படுத்தியுள்ளார். இவர் பாடலில் நிலையாமைப் பற்றிய செய்திகளாக, யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை, செல்வம் நிலையாமை, முதுமைத்துயர், உறவினர் உதவியி'ன்மை ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். குழித்தண்டலை, வளைகுளம் தேவாரத்தில் இல்லாத பகுதிகளாகும். இவற்றில் இவர் பாடிய தலங்களிலில் நிலையாமை பற்றிய*

*பாடல்களில் திருச்சிராப்பள்ளியை அடுத்துள்ள தேவாரப் பாடல்பெற்ற திருநெடுங்களம் (சோழநாட்டுத்தலம்) குறித்துப்பாடல் எழுந்துள்ளது. அவற்றில்,*

***"தொட்டுத் தடவித் துடிப்பொன்றும் காணாது***
***பெட்டப் பிணமென்று பேரிட்டுக் - கட்டி***
***எடுங்களத்தா என்னாமுன் ஏழைமட நெஞ்சே?***
***நெடுங்களத்தான் பாதம் நினை"***

***- (சேஷத்திரத் திருவெண்பா-8)***

*தொட்டுப்பார்த்தும் தடவிப்பார்த்தும் துடிப்பொன்றும் இல்லாமையால், வறிய பிணம் என்று பேரிட்டுப் பாடையில் வைத்துக் கட்டி, எடுங்கள் அத்தா என்னா முன், மடப்பம் பொருந்திய நெஞ்சமே! திருநெடுங்களம் எனும் ஊரில் எழுந்தருளிய இறைவனது பாதங்களை நினைப்பாயாக என்று மொழிகிறார். மேலும்,*

***"ஓடுகின்ற நீர்மை ஒழிதலுமே, உற்றாரும்***
***கோடுகின்றார்: மூப்புங் குறுகிற்று - நாடுகின்ற***
***நல்லச்சிற் றம்பலமே நண்ணாமுன், நன்னெஞ்சே***
***தில்லைச்சிற் றம்பலமே சேர்"***

***- (சேஷத்திரத் திருவெண்பா - 1)***

*வாழ்க்கையில் இயங்குகின்ற தன்மை ஒழிந்தவுடன் உறவினரின் மனம் திரும்பி வேறுபடுகிறார்கள். வயோதிகமும் நெருங்குகிறது. நாம் விரும்பும் உடல் இறந்து சுடுகாட்டை அடைவதற்கு முன் நல்ல நெஞ்சமே! திருச்சிற்றம்பலத்தை சேர்வாயாக என்கிறார். செல்வம் நிலையாமையைப் பற்றிக் குறிப்பிடும் ஒரு பாடலில்,*

***"படிமுழுதும் வெண்குடைக்கீழ்ப் பாரெலாம் ஆண்ட***
***முடியரசர் செல்வத்து மும்மைக் - கடியிலங்கு***
***தோடேந்து கொன்றையந்தார்ச் சோதிக்குத் தொண்டுபட்டு***
***ஓடேந்தி யுண்ப துறும்"***

***- (சேஷத்திரத் திருவெண்பா-10)***

*உலகமுழுவதையும் வெண்குடையின்கீழ் இருந்து ஆண்ட முடி சுடிய மன்னர், பெரிய அரச செல்வத்தை நுகர்ந்திருப்பதைப் பார்க்கிலும், மணமிகுந்த கொன்றை மாலையணிந்த ஒளி வடிவாகிய சிவபெருமானுக்குப் பணி செய்து ஐயம் ஏற்றுண்டல் மும்மடங்கு சிறந்தது என்று குறிப்பிடுகிறார். மன்னராய் இருந்தும் அரசை 'இன்னல் எனத் துறந்தார்' - என்று சேக்கிழார் கூறியதற்கு இவ்வெண்பாவும் ஒன்று. மேலும் ஒரு பாடலில்,*

***"நூற்றனைத்தோர் பல்லூழி நுண்வயிர வெண்குடைக்கீழ்***
***..............................................................................................***
***பாடரவம் கேட்ட பகல்"***

***- (சேஷத்திரத் திருவெண்பா-23)***

*நூற்றுக்கணக்கான பல்லூழிக் காலம் வெண்கொற்றக்குடைக்கீழ் அரசாட்சி செய்து கொண்டிருந்த அரசசெல்வத்தை விரும்பாதே, அப்பெருஞ்செல்வம் ஒருநாள் வீழும் தன்மையது. எமனை அழித்தவனும் ஆடுகின்ற பாம்பை அரையில் கச்சாகக் கட்டியவனுமாகிய அம்மானுடைய பாட்டின் ஒலி ஒருபகல் கேட்பதனால் வருமாம் பயன், ஆப்பயன் நூறாண்டுகாலம் அரசாட்சியிலும் கிடைக்காது. ஆகவே, திருக்கடவுர் சென்று இறைவனை தரிசிப்பாயாக என்கிறார்.*

***"குயிலொத் திருள்குஞ்சி கொக்கொத் திருமல்***

*பயிலப் புகாமுன்னம் நெஞ்சே - மயிலைத்*
*திருப்புன்னை யங்கானல் சிந்தியா யாகில்*
*இருப்பின்னை யங்காந் திளைத்து"*

*- (சேஷத்திரத் திருவெண்பா-12)*

*குயில் நிறம் போல் கருமையாக இருந்த மயிர், கொக்கைப் போல் வெண்மையாய் நரைத்து, இருமல் மிகுதிபடத் தொடங்குவதற்கு முன், திருமயிலைச் சிவபதியை சிந்திக்காமல் போனால், பின்னை வாய் திறந்துகொண்டு இறப்பதற்குமுன் அற்புதத் திருப்பதிக அடிகளைக் காண்பாயாக என்று இளமை மறைந்து முதுமைத் தோன்றும் முன் இறைவனை தரிசிக்குமாறு மொழிகிறார்.*

*"கரமூன்றிக் கண்ணிடுங்கிக் கால்குலைய மற்றோர்*
*மரமூன்றி வாய்குதட்டா முன்னம் - புரம்முன்றுந்*
*தீச்சரத்தாற் செற்றான் திருப்பனந்தாள் தாடையை*
*ஈச்சரத்தான் பாதமே ஏத்து"*

*- (சேஷத்திரத் திருவெண்பா-21)*

*கை ஊன்றி, கண்கள் குழிவிழுந்து, கால் தடுமாற ஊன்றுகோலை ஊன்றி, வாய் பேச முடியாமல் அசைப்பதற்குமுன், முப்புரங்களையும் தீயினைக் கூராகவுடைய அம்பினால் அழித்தவனும், திருப்பனந்தாளில் உள்ள தாடகையீச்சரத்தானுமாகிய இறைவனின் பாதங்களையே புகழ்வாயாக என்றும், ஒவ்வொரு பாடல்களிலும் "இறக்கும்போது எவ்விதத் துன்பமும் அடையாமல் இறப்பதற்கு இன்னின்ன தளிகளில் (தளி-தலம்-ஷேத்திரம் என்று பொருள்) வாழும் சிவனை நினைத்துக் கொள் மனமே" என்று மனத்திற்கு அறிவுறுத்துவதாக இவருடைய 24 பாடல்களுமே அமைந்துள்ளது.*

**நிறைவு**

*ஐயடிகள் காடவர் கோன் தான் அரசனாக வீற்றிருந்து ஆணவம் கொள்ளாமல், அன்பே சிவமாவது அறிதல் வேண்டும் என்பதை உணர்ந்து மனமொழி மெய்களில் இறைவனைக் கண்டு தலங்களை தரிசித்து பாடல்கள் பாடி அருளினார். இவர் பொங்கி எழும் காதல் கொண்டு தில்லைநகர் சென்று கூத்தப்பெருமானின் ஆடல் கண்டு மனம் உருகினார். செந்தமிழ் வெண்பா தில்லையில் பாடினார். சிவனடியார்கள் இன்பம் பெறுவதற்காகத் தமக்கிசைந்த பணிகளைப் பல நாட்கள் செய்து தொண்டுகள் புரிந்து வந்தார். அவ்வாறே, இறைவன் திருவருள் ஒன்றிலேயே மனதைக் குவித்தல், எந்தவித கவன சிதறலும் இல்லாமல் குறிக்கோள் ஒன்றையே நினைத்தல். இதையே மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் முதலில் வரும் சிவபுராணத்தில் கூறும்போது "இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!" என்று விளம்புகிறார். இந்த சிவபுராணம் கூறும்படி வாழ்ந்து, உலகியல் இன்ப வாழ்வை நீத்துச் சிவபெருமான் திருவடியின் கீழே வழிவழியாக நிற்கும் அடியார்களுடன் சேர்ந்து பேரின்பம் பெற்றார் ஐயடிகள் காடவர்கோன்.*

**பார்வை நூல்கள்**


1. *சமயம் காட்டும் சமூக மேம்பாடு, தொகுதி-1. முனைவர். ச.திருநாவுக்கரசு, ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி, மைலம்.*
2. *பெரியபுராண ஆராய்ச்சி ஆய்வு நூல், டாக்டர் மா.இராசமாணிகனார் எழுதிய நாட்டுடைமையாக்கப்பட்ட நூல், அலமு பதிப்பகம்.*

3. *பதினொன்றாம் திருமுறை (முதல்தொகுதி), பதிப்பாசிரியர். டாக்டர். இராசவசந்தகுமார், கற்பகம் பல்கலைக்கழகம், கோவை - 21.*
4. *பல்லவர் வரலாறு,* ta.m.wikiscourse.org., google.com., Tamilvu.com.
5. *உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், புசாக்கோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, நவநீத அச்சகம் சென்னை-96, முனைவர். கோ. விசயராகவன், கோயம்புத்தூர்.*